**தேதி :** 03.09.2025 **SC.No. :** 128/2021 PW :2 சதீஷ் என்ற
சுடர்மாணிக்கம்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் தீபாவளி அன்றைக்கு காலை கங்காஸ்தானம் எடுத்தேன் என்றால் சரிதான். சாதாரணமாக, இந்துக்கள் தீபாவளியன்று காலையில் தான் கோவிலுக்கு செல்வார்கள் என்றாலும், தீபாவளி தினத்தில் அசைவம் சமைப்பார்கள் என்றாலும் சரியல்ல. நாங்கள் அசைவம் சாப்பிடக்கூடியவர்கள் என்றால் சரிதான். ஆனால், சம்பவநாள் அசைவம் சாப்பிடவில்லை. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோவிலுக்கு செல்வதற்காக கிளம்பி வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், மணிகண்டனும் சிவசைலம் சைலப்பர் கோவிலுக்கு தான் கிளம்பினோம் என்றால் சரிதான். நாங்கள் தென்காசியிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் சாயங்காலம் 07.45 மணியளவில் கிளம்பினோம். நாங்கள் ஒரே பைக்கில் சென்றோம். யாருடைய பைக் என்று எனக்கு ஞாபகமில்லை.

சம்பவயிடத்திற்கு தனித்தனியாக இரண்டு பைக்கில் வந்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்திற்கு முன்னர் 20 நிமிடம் அங்கு இருந்திருப்போம். நான் முதலில் கிளம்பினேனா? என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்த நாளுக்கு முன்னால் எதிரிகளை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளின் பெயர், விலாசம் யாரிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டோம் என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பெயர், விலாசம் போலீசார் சொல்லித்தந்து சொன்னேன் என்றால் சரியல்ல. போலீசார்

விசாரணையில் யார் எனக்கு எதிரிகளின் பெயர் சொல்லித்தந்தார்கள் என்று சொல்லவில்லை. நடராஜன் குடும்பத்தை எனக்கு ஓரளவிற்கு தெரியும். அவருடைய அண்ணன் பெயர் எனக்கு தெரியாது.

நான் போலீசார் விசாரணையில், சம்பவம் குறித்து அ.சா.1 ன் சகோதரர் குமாருக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தகவல் சொன்னேனா? என்றால் நானும், மணிகண்டனும் சேர்ந்து தகவல் சொன்னோம். என்னுடைய போனிலிருந்து தகவல் சொல்லப்பட்டதா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. குமாரின் போன் நம்பர் எனக்கு தெரியுமா? என்றால் இல்லை. அ.சா.1 ஐ நாங்கள் எந்த வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் பைக்கில் தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சம்பவயிடத்திலிருந்து அ.சா.1 ன் அண்ணனுக்கு தகவல் சொன்னோம்.

நான் யாருடைய பைக்கில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை. தங்கபாண்டியன் மருத்துவமனையிலிருந்து உடனடியாக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அவருடைய அண்ணன் கொண்டு வந்து சேர்ந்தார். தங்கபாண்டியன் மருத்துவமனையில் வைத்து அ.சா.1 ஐ அவரது அண்ணனிடம் ஒப்படைத்து விட்டு நாங்கள் சென்று விட்டோம். இந்த விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் ஆய்வாளர் என்னை விசாரித்தாரா? என்றால் 03.11.2016 ம் தேதியன்று ஆய்வாளர் பாலமுருகன் என்னை விசாரித்தார். வேறு ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

அ.சா.1 நடராஜனும், நானும் நண்பர்கள் இல்லை என்றால் சரியல்ல. நானும், மணிகண்டனும் பொது இடத்தில் மது அருந்தி கொண்டிருந்தோம் என்றாலும், தென்காசி காவல்துறையினர் எங்களை பிடித்து வைத்து விசாரித்தபோது, நாங்கள் ஆசிரியர்களாக பணிபுரிந்து வருவதாகவும், எங்களுடைய பெயரையும், மணிகண்டன் அவருடைய அப்பா பெயரையும் மாற்றி போலீசாரிடம் சொன்னோம் என்றால் சரியல்ல. அப்போது, காவல்துறையினர் பெற்றுக்கொண்ட தவறான முகவரி மற்றும் பெயரை வைத்து இந்த வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவ காலக்கட்டத்தில் நான் ஆசிரியராக பணிபுரிந்து வந்ததற்கான ஆவணங்களை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை.

நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளிவிபரக்கணக்கிற்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:11:01 +0530

**தேதி :** 03.09.2025 **SC.No. :** 128/2021 **PW :3** மணிகண்டன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவ காலக்கட்டத்தில் பல்லக்கால்புதுக்குடியில் பகுதி நேர உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2008–2011 ம் ஆண்டு வரை சட்டக்கல்லூரியில் படித்து வந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் ஆழ்வார்க்குறிச்சியிலுள்ள வன்னியப்பர் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள அக்னிதீர்த்தக்கரை கோவிலுக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட நாள் சென்றேன் என்றால் சரிதான். என்னுடன் சதீஷிம் வந்தார் என்றால் நான் என்னுடைய பைக்கிலும், அவர் அவருடைய பைக்கிலும் வந்தார். அக்னிதீர்த்தக்கரை கோவிலுக்கு அமாவாசை அன்று மோட்சதீபம் ஏற்றுவதற்காக சென்றோம் என்றால் சாமி கும்பிட சென்றோம்.

தென்காசியிலிருந்து ஆழ்வார்க்குறிச்சிக்கு சாயங்காலம் 04.30 மணியளவில் கிளம்பினேன். அக்னிதீர்த்தக்கரை கோவிலுக்கு 06.00, 06.30 மணியளவில் சென்றோம். அங்கிருந்து பூஜை முடித்து விட்டு 09.00 மணியளவில் கிளம்பினோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அக்னிதீர்த்தக்கரை கோவிலில் இருந்து தென்காசி வந்தோம் என்றால் சரிதான். எதிரிகளை இந்த வழக்கிற்கு முன்பாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதிக்கு 10, 20 நாட்களுக்கு முன்பாகவே எதிரிகளை தெரியும். ஏற்கனவே, அ.சா.1 ன் சகோதரர் சுப்பிரமணியன் கடையில் எதிரிகள் சம்பவ தேதிக்கு 20 நாட்களுக்கு முன்பாக வந்தபோது பார்த்துள்ளேன். அப்போது, கடையில்

சுப்பிரமணியன் இருந்தார் என்றால் சரிதான். அப்போதே எதிரிகளின் பெயர், விலாசம் எனக்கு தெரியாது. இந்த விபரங்களை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சம்பவ விபரம் தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அப்போது, சுப்பிரமணியனும், எதிரிகளும் என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

இந்த வழக்கின் சம்பவத்திற்கு பின்னால் சுப்பிரமணியனிடம் நான் பேசவில்லை. கோவிலுக்கு செல்வதற்காக என் ஊரிலிருந்து 02.00 மணிக்கு கிளம்பி தென்காசிக்கு 02.30 மணிக்கு வந்தேன். சதீஷ் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் என்னுடன் சேர்ந்து வேறொரு பைக்கில் வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்திலிருந்து காயம்பட்ட நபரை போக்கு ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் முதலில் தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு சதீஷின் பைக்கில் நானும், சதிஷிம் காயம்பட்டவரை நடுவில் அமரவைத்து கூட்டிக்கொண்டு சென்றேன்.

காயம்பட்ட நபருக்கு இரத்தக்கசிவு இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திலிருந்து அ.சா.1 ன் சகோதரர் குமாருக்கு என்னுடைய போன் எண்.9790583315 என்ற எண்ணிலிருந்து போன் செய்தேன். குமாரின் போன் நம்பர் எனக்கு ஞாபகமில்லை. நான் போன் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த விபரங்களை ஆய்வாளரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தங்கபாண்டியன் மருத்துவமனையிலிருந்து உடனே தென்காசி அரசு மருத்துவமனைக்கு காயம்பட்டவரை போக்கு ஆட்டோவில் ஏற்றி அனுப்பினோம். நான்

செல்லவில்லை. சதீஷ் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றாரா? என்றால் நான் கவனிக்கவில்லை. காயம்பட்டவருடன் வேறு யார் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர் அண்ணனுக்கு தகவல் சொன்னோம். சம்பவ காலக்கட்டத்தில் நான் சட்டப்படிப்பு படித்து கொண்டிருந்தேன்.

நான் காவல்நிலையத்தில் போன் மூலம் புகார் கொடுக்கவில்லை. நான் நேரடியாகவும காவல்நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் தீபாவளி என்றால் சரிதான். அதற்கு மறுநாள் தேவர் நினைவு நாள் என்றால் எனக்கு தெரியாது. தீபாவளி, தேவர் நினைவு நாள் ஆகியவற்றின் போது, போலீசார் பாதுகாப்பிற்கு போட்டிருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவநாள் போலீஸ் பந்தோபஸ்து சம்பவயிடத்தில் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கு ரோந்து போலீசார் வந்தார்களா? என்றால் எனக்கு தெரியாது. தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு செல்லும்போது, போலீஸ் பூத் உள்ளது என்றால் நாங்கள் குறுக்கு வழியில் சென்றோம். நான் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

காயம்பட்டவரை சம்பவத்திற்கு மறுநாள் நான் மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றால் 10 நாட்கள் கழித்து தான் பார்த்தேன். அ.சா.1 என்னுடைய நண்பராக உள்ளநிலையில் அவரை மட்டும் தனியாக மருத்துவமனைக்கு ஏன் அனுப்பி வைத்தேன் என்றால் நான் காயம்பட்டவரின் அண்ணனுக்கு தகவல் சொல்லிவிட்டு, கோவிலுக்கு செல்லவேண்டும் என்பதினால் சென்றேன். நான் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும், நான் அ.சா.1 டன் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும் சரியல்ல.

அ.சா.1 என்னுடைய நண்பரே கிடையாது என்றால் சரியல்ல. நானும், அ.சா.2ம் பொதுவழியில் மது அருந்திகொண்டிருந்தபோது, தென்காசி காவல்துறையினர் எங்களை பிடித்து விசாரித்ததாகவும், அவரிடமிருந்த தப்பிப்பதற்காக அ.சா.2 அவருடைய பேரையும், நான் எனது தகப்பனார் பேரையும் மாற்றி பொய்யான முகவரியை கொடுத்தாகவும் எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளர் விசாரணையில் என்னுடைய அப்பா பெயரை ஆதினம் என்று தான் சொல்லியுள்ளேன். என்னுடைய அப்பா பெயர் தவறாக சாட்சி பட்டியலில் உள்ளது எப்போது தெரியும் என்றால் குற்றப்பத்திரிக்கையில் போட்டபோது தெரிந்தது. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தபிறகு தான் சொன்னேன். காவல்துறையினரிடம் நாங்கள் கொடுத்த பொய்யான பெயர், தகப்பனார் பெயர் மற்றும் முகவரியை வைத்து எங்களை இந்த வழக்கில் சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், நான் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ நேரத்தில், சம்பவயிடத்தில் 10, 15 பேர் கூடினார்கள். பக்கத்து கடையில் உள்ளவர்கள் வந்தார்களா? என்றால் எனக்கு யாரென்று தெரியாது. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களின் புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரிகள் மீது போடப்பட்ட பொய் வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:11:23 +0530